IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

**OS. No.**133/2013 **Date**: 19.09.2023

**PW** 2-செந்தில் குமார்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் 1, 2 வாதிகள் கேட்டு கொண்டதால் சாட்சி சொல்ல வந்தேன். 1 ம் வாதி யார் பெயரில் பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 1 ம் வாதி தற்போது அமெரிக்காவில் வசிக்கிறார். 2 ம் வாதி தற்போது கோவையில் வசிக்கிறார். அவருடைய முகவரி எனக்கு தெரியாது. 1, 2 பிரதிவாதிகள் எனக்கு பழக்கம் தான் உறவினர்கள் இல்லை. 1 ம் பிரதிவாதி தற்போது எங்கு வசிக்கிறார் என்று தெரியாது. அவர் நடோடியாக சுற்றி கொண்டிருக்கிறார். அவர் தன் மகன் 1 ம் வாதியுடன் அமெரிக்காவில் வசிக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. 1 ம் பிரதிவாதி சொத்தை எந்த தேதியில் விற்றார் என்று எனக்கு தெரியாது. 2004 ம் ஆண்டு விற்றார். விற்பனை செய்த சொத்தின் சர்வே எண்கள்.204/1 பி, 204/3. மேற்படி சர்வே எண்களில் எத்தனை வீடுகள் தற்போது உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1 ம் பிரதிவாதியை எனக்கு பார்த்தால் அடையாளம் தெரியும். அவரது மகள், 2 ம் வாதியை எனக்கு பார்த்தால் அடையாளம் தெரியும். 1 ம் பிரதிவாதி மனைவியுடன் சேர்ந்து வசிக்கிறார் என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதிக்கும், 2 ம் வாதிக்கும் இடையே பேச்சுவார்த்தை உண்டு என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ளவர்கள் யார் என்று கேட்டால் 1 ம் பிரதிவாதியும் அவரது மனைவியும் உள்ளார்கள். அந்த புகைப்படங்கள் பி.வா.சா.ஆ.4, பி.வா.சா.ஆ.5. என்னிடம் காட்டப்படும் மற்றோரு புகைப்படத்தில் சுந்தர்ராஜ் மற்றும் அவரது மனைவி, மகள் உள்ளார்கள் என்றால் சரிதான். அந்த புகைப்படம் பி.வா.சா.ஆ.6. 1 ம் பிரதிவாதி தேவூர் முகவரி எனக்கு தெரியாது. 1 ம் பிரதிவாதி சொத்துக்களை நாச்சியப்பன் என்பவருக்கு விற்பனை செய்தார். வாதிகள் மற்றும் 1 ம் பிரதிவாதி ஆகியோர் ஒன்றாக தான் வசித்து வருகிறார்கள் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-செந்தில் குமார்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.